திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, இந்த ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட இந்தப் பணி முடிவடையாமல் இருக்கக் காரணம் நிதிப் பற்றாக்குறை தான் என்று சொல்கிறார்கள். ஆகவே தேவையான நிதியை ஒதுக்கி, இந்த ஆண்டிலேயே நிதியை ஒதுக்கி அந்தப் பணியை விரைவுபடுத்த அமைச்சர் அவர்கள் முயற்சியை மேற்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் இது வரக்கூடிய திட்டம் ஆகும். இதற்குத் திட்ட மதிப்பீடு ரூ. 22 லட்சம் ஆகும். இந்தத் திட்டத்தை நாம் மேற்கொள்வதற்கு நிலத்தைக் கையகப் படுத்த வேண்டிய பணிகள் போன்ற பணிகள் தேக்கத்திலே நின்று விட்டன. எனினும் நம்முடைய பொதுப் பணித் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் 28–5–1984 அன்று பணியைத் துவக்கினால் நல்லது என்று தொடர்ந்து பணியைச் செய்கிறபோது ஆர். எல். இ. ஜி. பி.-யிலிருந்து வரக் கூடிய நிதி வருவதற்குச் சற்றுக் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. நிறுத்திய பணிகளை விரைவில் நிறைவேற்ற, அந்தப் பணிகளின் நன்மைகள் மக்களுக்குக் கிடைக்க இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் வி. பி. சிந்தன், ப. பொன்னுரங்கம், பரிதி இளம்வழுதி ஆகியோர் ஸ்டான்லி பிரச்சனையைப் பற்றி அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் வரவில்லை....

திரு. அ. ரகுமான்கான் : நான் கொடுத்து பத்து நாளாகி விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்குக் காலையிலே தான் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

1986 ஏப்ரல் 28]

திரு. அ. ரகுமான்கான் : எனக்கும் வாய்ப்புத் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மறு பரிசீலனை செய்தால்தான் எடுக்க முடியும். அவர்களுக்கு வாய்ப்பு இருந்தால் உங்களுக்கும் வாய்ப்பு உண்டு.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : * * * *

(முற்பகல் 10-20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் வேண்டாம். இது கட்சிப் பிரச்சனை அல்ல. அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு எடுக்கப்படும். இதுவரை பேசியவை எல்லாம் நீக்கப்படுகின்றன.

திரு. சைதை சா. துரைசாமி : தலைவர் அவர்களே, நான் உங்களிடமிருந்து ஒரு விவரத்தை அறிந்து கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் தங்கவேலு அவர்கள் பேசும்போது, கனம் ஸ்ரீ என்று சபாநாயகர் அவர்களையும், அமைச்சர் அவர்களையும் அழைக்கிறார். மாண்புமிகு என்று தமிழில் அற்புதமான வார்த்தை இருக்கும் பொழுது அவ்வாறு அழைக்கலாமே. அதை விடுத்து அவர் கனம், ஸ்ரீ என்று அழைக்கிறாரே இது சபை மரபுதானா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்படி நம்முடைய வரைமுறை இருக்கிறதோ அதன் பிரகாரம் மாற்றிவிடலாம்.

திரு. பரிதி இளம்வழுதி : தலைவர் அவர்களே, ஒரு சின்ன சந்தேகம். தெரிந்துகொள்ள விரும்புகிறேன். யாருக்காகவும் என்னுடைய கருத்துக்களிலிருந்து நான் பின்வாங்க மாட்டேன் என்று நீங்கள் சொன்னீர்கள். ஏற்கனவே ஒரு தீர்ப்பை ரத்து செய்து இருக்கிறீர்கள். அதேபோல ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கட்சித் துணைத் தலைவர் பேசிய காரணத்தினால் தான். அதையும் சொல்லி விட்டேன். இந்தப் பிரச்சனை வேண்டாம். ரூமில் பேசலாம். நிலைநாட்ட வேண்டுமென்ற நிலை ஏற்பட்டால் நிலைநாட்டத் தயார்.

திரு. வி. தங்கவேலு : ப்ளீஸ் அலவ் மி டு டாக். கனம் சபாநாயகர் அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவரை வட நாட்டிற்கு அனுப்புங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.